**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 331/2022**

Prosecution witness : 3

| | | | |
|---|---|---|---|
| Name: | முருகன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1- A3 produced. A4-produced through VC. A5 absent. Petition u/s 355 BNSS filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 01.10.2024**

**முதல் விசாரணை**:

நான் தற்போது துாத்துக்குடி, போதைப்பொருள்நுண்ணறிவுபிரிவில் சிறப்பு உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.10.2021 அன்று துாத்துக்குடி போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவில் தலைமைக்காவலராக நானும், தலைமைக்காவலர்-உதயக்குமார் என்பவரும் ஆஜரில் இருந்தபோது காலை 11.15 மணிக்கு நிலைய குற்ற எண்.18/2021, ச/பி 8(C)r/w 20(b)(ii)(C) 29(1). 25 NDPS ACT வழக்கின் எதிரிகளான அந்தோணிப்பிச்சை, ஜெனிஸ்டன், ஜெய்ஸ்டன், செல்வராஜ் ஆகியோர்களை காவல் ஆய்வாளர் சித்ரா அவர்கள் எங்கள் முன்பு கைது செய்து வழக்கின் 1 வது எதிரியான அந்தோணிப்பிச்சை, வயது 41/2021, த/பெ.ஜார்ஜ், திரேஸ்புரம், துாத்துக்குடி என்பவரை எங்கள் முன்னர் விசாரணை செய்தபோது எதிரி தானாக எந்தவித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இல்லாமல் ஒப்புதல் வாக்குமூலம்

கொடுத்தார். காவல் ஆய்வாளர் அவர்கள் அதை பதிவு செய்தார். கியூபிரிவு காவல் ஆய்வாளர் விஜயஅனிதா அவர்கள் நிலையத்தில் ஒப்படைத்த 15 வெள்ளை நிற சாக்குப்பைகளில் உள்ள கஞ்சாவை 1 வது சாக்குப்பையில் இருந்து 35 கிலோ 500 கிராம் இருந்தது. அதில் மாதிரிக்காவும், ஆய்வுக்காகவும் தலா 25 கிராம் பாலித்தீன் பையில் வைத்து காக்கி பேப்பரில் மடித்து நூலால் கட்டி அதில் NIB சீல் வைத்து S1. S2 என்று குறியீடு செய்தோம். மீதம் உள்ள 35 கிலோ 450 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து P1 என்று குறியீடு செய்து NIB சீல் வைத்தோம். 2 வது சாக்குப்பையில் 39 கிலோ 500 கிராம் கஞ்சாவை மாதிரிக்காவும் ஆய்வுக்காகவும் தலா 25 கிராம் பாலித்தீன் பையில் வைத்து காக்கி பேப்பரில் மடித்து அதற்கு S3, S4 என்று குறியீடு செய்தோம். மீதம் உள்ள 39 கிலோ 450 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து NIB சீல் வைத்து P2 என குறியீடு செய்தோம். 3 வது சாக்குப்பையில் உள்ள 35 கிலோ கஞ்சாவை ஆய்வுக்காகவும், மாதிரிக்காவும் 25 கிராம் கஞ்சாவை எடுத்து அதை பாலித்தீன் பையில் வைத்து காக்கி கவரில் மடித்து NIB சீல் வைத்து S5, S6 என்று குறியீடு செய்தோம். மீதம் உள்ள 34 கிலோ950 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து P3 என குறியீடு செய்தோம். 4 வது சாக்குப்பையில் உள்ள 35 கிலோ கஞ்சாவை ஆய்வுக்காகவும், மாதிரிக்காகவும் தலா 25 கிராம் கஞ்சாவை பாலிதீன் கவரில் வைத்து காக்கி கவரில் வைத்து மடித்து S7, S8 என குறியீடு செய்தும் NIB சீல் வைத்தோம். மீதம் உள்ள கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து P4 என குறியீடு செய்து NIB சீல் வைத்தோம். 5 வது சாக்குப்பையில் உள்ள 35 கிலோ 500 கிராம் கஞ்சாவை மாதிரிக்காவும், ஆய்வுக்காகவும் தலா 25 கிராம் பாலிதீன் கவரில் வைத்து காக்கி கவரில் மடித்து S9, S10 என குறியீடு செய்தும் NIB சீல் வைத்தோம். மீதம் உள்ள 35 கிலோ 450 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து P5 என குறியீடு செய்தும் NIB சீல்

வைத்தோம். 6 வது சாக்குப்பையில் 35 கிலோ கஞ்சாவில் ஆய்வுக்காகவும், மாதிரிக்காகவும் தலா 25 கிராம் எடுத்து S11, S12 என்று குறியீடு செய்தோம். மீதம் உள்ள 34 கிலோ 950 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து P6 என குறியீடு செய்தும் NIB சீல் வைத்தோம். 7 வது சாக்குப்பையில் 35 கிலோ கஞ்சாவை ஆய்வுக்காகவும், மாதிரிக்காவும் தலா 25 கிராம் பாலிதீன் கவரில் எடுத்து காக்கி கவரில் வைத்து மடித்து அதற்கு S13, S14 என குறியீடு செய்தும், NIB சீல் வைத்தோம். மீதம் உள்ள 34 கிலோ 950 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து அதற்கு P7 என குறியீடு செய்து NIB சீல் வைத்தோம். 8 வது சாக்குப்பையில் உள்ள 35 கிலோ கஞ்சாவை மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் தலா 25 கிராம் எடுத்து பாலிதீன் கவரில் வைத்து காக்கி கவரில் மடித்து அதற்கு S15, S16 என குறியீடு செய்தோம். மீதம் உள்ள 34 கிலோ 950 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து NIB சீல் வைத்தோம். 9 வது சாக்குப்பையில் உள்ள 39 கிலோ 500 கிராம் கஞ்சாவை மாதிரிக்காகவும் தலா 25 கிராம் எடுத்து பாலிதீன் கவரில் வைத்து அதற்கு S17, S18 என குறியீடு செய்தோம். மீதம் உள்ள 39 கிலோ 450 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து P9 என குறியீடு செய்து அதற்கு NIB சீல் வைத்தோம். 10 வது சாக்குப்பையில் உள்ள 40 கிலோ கஞ்சாவை மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் தலா 25 கிராம் பாலிதீன் கவரில் எடுத்து காக்கி கவரில் மடித்து S19, S20 என குறியீடு செய்தோம். மீதம் உள்ள 39 கிலோ 950 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து P10 என குறியீடு செய்து அதற்கு NIB சீல் வைத்தோம். 11 வது சாக்குப்பையில் உள்ள 35 கிலோ கஞ்சாவை மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் தலா 25 கிராம் பாலிதீன் கவரில் எடுத்து காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி NIB சீல் வைத்து அதற்கு S21, S22 என குறியீடு செய்தோம். மீதம் உள்ள 34 கிலோ 950 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து NIB சீல் வைத்து அதற்கு P11 என குறியீடு

செய்தோம். 12 வது சாக்குப்பையில் உள்ள 30 கிலோ கஞ்சாவை ஆய்வுக்காகவும், மாதிரிக்காகவும் தலா 25 கிராம் பாலிதீன் கவரில் எடுத்து காக்கி கவரில் வைத்து நூலால் கட்டி அதற்கு S23, S24 என குறியீடு செய்தும், NIB சீல் வைத்தோம். மீதம் உள்ள 29 கிலோ 950 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து கட்டி NIB சீல் வைத்து P12 என குறியீடு செய்தோம். 13 வது சாக்குப்பையில் உள்ள 35 கிலோ கஞ்சாவை மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் தலா 25 கிராம் பாலிதீன் கவரில் எடுத்து காக்கி கவரில் வைத்து மடித்து நூலால் கட்டி அதற்கு S25. S26 என குறியீடு செய்தும், NIB சீல் வைத்தோம். மீதம் உள்ள 34 கிலோ 950 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து கட்டி NIB சீல் வைத்தும் P13 என குறியீடு செய்தோம். 14 வது சாக்குப்பையில் உள்ள 30 கிலோ கஞ்சாவை மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் தலா 25 கிராம் கஞ்சாவை பாலிதீன் கவரில் எடுத்து காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி அதில் NIB சீல் வைத்து அதற்கு S27,S28 என குறியீடு செய்தோம். மீதம் உள்ள 29 கிலோ 950 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து நூலால் கட்டி NIB சீல் வைத்தோம். 15 வது சாக்குப்பையில் உள்ள 35 கிலோ கஞ்சாவை மாதிரிக்காகவும், ஆய்வுக்காகவும் தலா 25 கிராம் எடுத்து பாலிதீன் கவரில் வைத்து காக்கி கவரில்மடித்து நூலால் கட்டி அதற்கு S29,S30 என குறியீடு செய்தோம். மீதமுள்ள 34 கிலோ 950 கிராம் கஞ்சாவை அதே சாக்குப்பையில் வைத்து நூலால் கட்டி P15 என குறியீடு செய்து, NIB சீல் வைத்தோம். இவை அனைத்திற்கும் லேபிள் ஒட்டி அதில் நானும் உதயக்குமாரும், அந்தோணிப்பிச்சையும் கையொப்பம் செய்தோம். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் -சித்ரா எங்களை விசாரித்தார்கள். குறிப்பு- 5 வது எதிரி தரப்பில் இந்த சாட்சியின் வாக்குமூலத்தில் ஏற்கனவே சொன்னவைகள் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் நடந்ததை குறித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்பட்டு நகல் கொடுக்கப்படவில்லை என்றும் இறுதி

அறிக்கையுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவும் இல்லை என ஆட்சேபிக்கப்பட்டது. எனவே, ஆட்சேபனையின் பேரில் கீழ்காணும் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

பின்னர் 12.01.2022 ம் தேதி நிலையத்தில் ஆஜரில் இருந்தபோது காவல் ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த தகவலின் படி தலைமறைவு 5 ம் எதிரி - சுரேஷ் என்பவரை பற்றி கிடைத்த தகவலின் படி காவல் ஆய்வாளர் சித்ராஅவர்களுடன் நானும், வீரதேவஜாட்டின் என்பவரும் கீழவைப்பாருக்கு சென்று மேற்படி 5 வது எதிரியை கண்காணிக்க கீழவைப்பாரிலிருந்து 1 1/2 கிலோ மீட்டர் வடக்கே வெள்ளைப்பாலம் அருகில் நின்றிருந்த சுரேஷ், வயது 41/2022, த/பெ.தோமஸ்செல்வராயர் 1/81, பழைய காலனி தெரு, கீழவைப்பார், தூத்துக்குடி என்பவரை 9.15 மணியளவில் கைது செய்தும், எதிரியை அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இன்றி கொடுத்த வாக்குமூலத்தை 9.30 மணியிலிருந்து 10.15 வரை பதிவு செய்தும், அருகில் இருந்து யாரும் கையெழுத்து செய்ய முன் வராத காரணத்தால் நானும், வீரதேவஜாட்டியும் அதில் கையெழுத்து செய்தோம். எதிரி அணிந்திருந்த டீசெர்ட்டிலிருந்து அவராக எடுத்து கொடுத்த கிரே கலர் நோக்கியோ சிம்முடன் கூடிய செல்போனை 10.30 மணியிலிருந்து 11.00 மணி வரை ஆய்வாளர் அவர்கள் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அதில் நானும் , வீரதேவஜாட்டியும் கையெழுத்து செய்தோம். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் சித்ரா அவர்கள் என்னை விசாரித்தார். அந்தோணிப்பிச்சையின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.6** ஆகும். 2 வதாக தூத்துக்குடி போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு காவல் நிலையத்தில் வைத்து மாதிரி பொட்டலங்களை எடுத்து சொத்துக்களை கைப்பற்றியதற்கான அத்தாட்சி **அ.சா.ஆ.7** ஆகும். 5 வது எதிரி-சுரேசின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான்.

அந்த கையொப்பம் **அ.சா.ஆ.8** ஆகும். 5 வது எதிரியிடமிருந்து கைபேசியை கைப்பற்றியதற்கான அத்தாட்சி **அ.சா.ஆ.9** ஆகும்.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எங்களுக்கு வருகைப்பதிவேடு உள்ளது. எங்களுக்கு ரோல்கால் கிடையாது. தினசரி டியூடி அலாட்மெண்ட் உண்டு. 08.10.2021 அன்று நான் பணிக்கு வந்த நேரம், என்ன அலுவலில் இருந்தேன் என்பது அலுவலகத்தில் குறிப்பேடு இருக்கும் அதை பார்த்தால் அந்த விபரத்தை தெரிந்துகொள்ளலாம். எங்கள் காவல்நிலையத்தில் 13 பேர் மொத்தம் பணிபுரிகிறோம். 08.10.2021 அன்று காவல்நிலையத்திற்கு யார், யார் வேலைக்கு வந்தார்கள், யார் யார் ஆஜரில் இருந்தார்கள் என்ற விபரம் தெரியாது. கியூபிராஞ்ச் காவல்நிலையம் துாத்துக்குடி நகரில் தான் உள்ளது. எங்கள் காவல்நிலையத்தில் இருநது கியூபிராஞ்ச் காவல்நிலையம் சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. நான் அன்றையதினம் அதிகாலை 7.00 மணியளவில் வேலைக்கு காவல்நிலையம் வந்தேன். அப்போது இந்த எதிரிகள் எங்கள் காவல்நிலையத்தில் இல்லை. கியூபிராஞ்ச் ஆய்வாளர் கூட்டி வந்த விபரம் தெரியும். ஆனால் எந்த வாகனத்தில் எத்தனை மணிக்கு எதிரிகளை கூட்டி வந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையை நான் பார்க்கவில்லை. அன்றைய தினம் இந்த வழக்கை தவிர வேறு வழக்குகள் பதிந்த விபரம் மற்றும் அங்கிருந்த ஆட்கள் விபரம் எனக்கு தெரியும். வழக்குபற்றிய விபரங்களை ஆய்வாளர் என்னிடம் சொன்னார். எத்தனை மணிக்கு தகவல் சொன்னார்கள் என தெரியுமா என்றால் 11.00 மணியிருக்கும். இந்த எதிரிகளை முதன் முதலாக எப்போது, எத்தனை மணிக்கு நிலையத்தில் பார்த்தேன் என்றால் 11.00 மணிக்கு பார்த்தேன். கைது செய்வதற்கு முன்னர் எதிரிகளை சோதனை செய்தார்கள். உங்களை கைது செய்யப்போகிறோம் என்று அவர்களுக்கு அறிவிப்பும் கொடுத்தார்கள். இவர்களை கைது செய்யும்போது எங்கள்

காவல்துறையை சேர்ந்த நபர்களை தவிர வேறு யாரும் கிடையாது. எங்கள் காவல்நிலையம் இருக்கும் இடம் ஜனரஞ்சகமான இடம் தான். கைது செய்யும்போது ஆய்வாளர் எல்லோரையும் விசாரித்தார்கள். ஒவ்வொரு எதிரியாக விசாரித்தார்கள். அவர்கள் சொன்னதை பதிவு செய்தார்கள். எல்லா எதிரிகளிடமும் கையொப்பம் வாங்கினார்கள். அந்த வாக்குமூலங்களில் நானும், உதயகுமாரும் சாட்சி கையொப்பம் இட்டோம். கியூபிராஞ்ச் காவல்துறையை சேர்ந்தவர்கள் மூடையை கையில் சுமந்து எங்கள் அலுவலகத்திற்கு கொண்டுவந்தார்கள். அப்போது அவர்கள் கொண்டு வரும்போது எந்த மூடை 1 மற்றும் 2 என்ற விபரம் தெரியாது. அப்படி அதை சுமந்துகொண்டு வந்தவர்களின் பெயர் விபரம் எதுவும் தெரியாது. வெள்ளை கலர் மூடை என்பதை தவிர வேறு அடையாளங்கள் எதுவும் என்னால் சொல்லமுடியாது. நான் அப்படி சுமந்து வந்த காவலர்களிடம் அதுபற்றி எதுவும் விசாரித்துகொள்ளவில்லை. அது எங்கிருந்து யாரால் அனுப்பப்பட்டது, எங்கிருந்து வந்தது என்று காவல் ஆய்வாளருக்குத்தான் தெரியும். 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எடைவிபரங்கள் அனைத்தும் முதல் தகவல் அறிக்கையில் இருப்பதை வைத்துத்தான் நான் சொல்கிறேன் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் எத்தனை மணி வரை காவல்நிலையத்தில் இருந்தேன் என்றால் மறுநாள் காலை 8.00 மணி வரை காவல்நிலையத்தில் இருந்தேன். 08.10.2021 அன்று காவல் ஆய்வாளர்கள் வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என் முன்பாக என்னென்னென்ன வழக்கு நடவடிக்கையினை மேற்கொண்டார் என்பதை நான் முழுமையாக சாட்சியம் சொல்லியிருக்கிறேன். புளூகலர் மார்க்கரில் குறியீடு செய்தோம். நான் தான் குறியீடு செய்தேன். ஆய்வாளர் சொல்லச்சொல்ல நான் அதில் எழுதினேன். அன்றைய தினம் எங்கள் துறைதரப்பினரை தவிர வேறு யாரும் காவல்நிலையம் வரவில்லை. நான் சொன்னபடி , சொன்ன நேரத்தில் எதிரி

கைதுசெய்யப்படவில்லை என்றாலும், அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் நான் கொடுத்தாக சொல்லப்படும் வாக்குமூலம் காவல்நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்யப்பட்டு வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்யப்பட்டிருப்பதை அனுசரித்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதைபோல்,சொன்னநேரத்தில்,சொன்னவிதத்தில் மாதிரிகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் அதற்கான அத்தாட்சி நான் சொல்வதைபோல் தயார் செய்யப்படவில்லை என்றாலும் அவைகள் பின்னிட்டு இந்த வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் கையொப்பம் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு மிரட்டி விபரம் எதுவும் சொல்லாமல் வாங்கியது என்றால் சரியல்ல. எங்கள் காவல்நிலையத்தில் எடைபோடு வதற்கான வசதிகள் எதுவும் இல்லை என்ற காரணத்தால் அன்றைய தினம் எடைபோட்டதாக சொல்வது மாதிரி எடுத்தாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் காவல்நிலையத்தில் மொத்தம் எத்தனை அறைகள் உள்ளது என்றால் 6 அறைகள் உள்ளது. எதிரிகளை காவல் ஆய்வாளர் அறைக்கு பக்கத்து அறையில் வைத்திருந்தோம். பொருட்களும் அந்த அறையின் அருகிலேயே இருந்தது. 1 வது எதிரி கொடுத்த வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் எழுதினார். நான் சொன்னநேரத்தில் நான் ஆவணங்களில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் எங்களின் வருகைப்பதிவேடு மற்றும் எனக்கு கொடுத்த பணி குறித்த விபரத்தை பார்க்கும் பட்சத்தில் இந்த ஆவணங்கள் தயாரித்த உண்மைநிலை தெரியும் என்பதால் அதை ஆய்வாளர் மறைத்துவிட்டார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை என்று விசாரணை செய்தார்கள் என்றால் 08.10.2021 அன்று விசாரணை செய்தார்கள். எத்தனைமணிக்கு என்று தெரியாது. எங்கள் காவல்துறை போட்ட வழக்கினை அனுசரித்து இந்த

நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லிய கஞ்சாவின் எடை விபரங்கள் சரியானதுதான். அது கூடுவதற்கோ, குறைவதற்கோ வாய்ப்பில்லை.

மற்ற எதிரிகளின் குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.